# விஜயபாரதம்

மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY

பிலவ, ஆனி - 19 சனி 03.07.2021 மலர் - 2, இதழ் - 88


## பயிர் காப்பீட்டு திட்டம் சாதனை

பாரத சுதந்திரத்தின் 75வது ஆண்டை கொண்டாடும் அம்ரித் மகோத்சவத்தின் ஒரு பகுதியாக பயிர் காப்பீடு வாரம் தொடங்கப்பட்டுள்ளது. இதில் பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்துக்காக விழிப்புணர்வு பிரச்சாரம் துவக்கிவைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் நரேந்திர சிங் தோமர், 'ஒவ்வொரு விவசாயிக்கும் பாதுகாப்பு அளிப்பதுதான் பசல் பீமா யோஜனா என்ற பயிர் பாதுகாப்பு திட்டத்தின் நோக்கம். இந்த காப்பீடு திட்டம் மூலம் விவசாயிகள் 95 ஆயிரம் கோடி ரூபாயை இழப்பீடாகப் பெற்றுள்ளனர். பிரதமரின் பயிர் காப்பீடு திட்டத்தை அமல்படுத்துவதில் மாநில அரசுகள் மற்றும் காப்பீடு நிறுவனங்களுக்கு முக்கிய பங்கு உண்டு. கடந்த 4 ஆண்டுகளில், விவசாயிகள் பயிர் காப்பீடு பிரீமியமாக ரூ. 17 ஆயிரம் கோடி செலுத்தியுள்ளனர். ஆனால் இழப்பீடாக அவர்களுக்கு ரூ. 95 ஆயிரம் கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும். அப்போதுதான் அதிக விவசாயிகள் பலன் அடைவர்' என்று கூறினார்.

விஜயபாரதம்




## அயோத்தியில் நிலமுறைக்கேடு நடக்கவில்லை




விஜயபாரதம்

ஸ்ரீராம ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ரா அறக்கட்டளையின் பொருளாளர் ஸ்ரீ கோவிந்த் தேவ் கிரிஜி மகாராஜ் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில், 'அயோத்தியில் நிலம் வாங்குவதில் ஏந்த முறைகேடும் நடக்கவில்லை. அயோத்தியில் ஸ்ரீராமர் கோயில் வளாகம் கட்டுவதில் இடையூறு விளைவிக்கும் நோக்கில் இந்த குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு உள்ளன. நிலம் வாங்குவதில் அனைத்து விதிகளும் பின்பற்றப்பட்டு அனைத்து பரிவர்த்தனைகளும் வங்கிகள் வழியாகவே நடந்துள்ளன. உடுப்பி பெஜாவர் மடம் சுவாமி விஸ்வபிரசன்னா தீர்திஜி மகாராஜ், அறங்காவலர் காமேஷ்வர் சௌபால்,வழக்கறிஞர்கள், பட்டயக்கணக்காளர்கள் என அனைவரும் என்னுடன் இணைந்தே ஆவணங்களை ஆய்வு செய்தனர். குற்றம் சாட்டுபவர்களின் மனதில் இன்னும் ஏதேனும் சந்தேகங்கள் இருந்தால், அவர்கள் சுற்றியுள்ள சில நிலங்களை குறைந்த விலையில் அல்லது அறக்கட்டளை வாங்கிய விலையில் நிலங்களை வாங்க முயற்சிக்க வேண்டும்' என கூறியுள்ளார்.

# வளரும் பொருளாதாரம்



விஜயபாரதம்

ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள நிதி ஸ்திரத்தன்மை அறிக்கையில், 'கடந்த 2020 21ம் நிதியாண்டின், அக்டோபர் முதம் மார்ச் வரையிலான இரண்டாவது அரையாண்டில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி வளர்ச்சி அடைந்தது. ஆனால் அது, கொரோனா 2வது அலையால், இந்தாண்டு ஏப்ரல், மே மாதங்களில் பாதிக்கப்பட்டது. தற்போது, கொரோனா வேகம் தணிந்து வருவதால் பொருளாதாரநடவடிக்கைகள்வேகமெடுக்கத்துவங்கியுள்ளன. வாராக் கடன்கள் சதவீதம் அதிகரிக்கவில்லை. தகவல் திருட்டு, கணினி மோசடி போன்றவை, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறாக உள்ளன. உலக அளவிலான விலை உயர்வு, பணவீக்கம், சர்வதேச நிதிச் சந்தையில் நிலையற்ற தன்மை போன்றவை நம் வளர்ச்சிக்கு தடைக் கற்களாக உள்ளன. அரசின் ஸ்திரமான கொள்கை, மூலதன உயர்வு நடவடிக்கை, நிதி நிறுவனங்களிடம் பணப்புழக்கத்தை அதிகரித்தல் போன்றவற்றின் வாயிலாக பொருளாதார வளர்ச்சிக்கான சவாலை சமாளிக்கலாம்' என்று கூறப்பட்டுள்ளது.

# ஹனுமன் கோயில் கும்பாபிஷேகம்

திரைப்பட நடிகர் அர்ஜுன், சென்னை கெருகம்பாக்கத்தில் கட்டிவந்த ஹனுமன் கோயில் கும்பாபிஷேகம் நேற்று இனிதே நடைபெற்றது. இது அவருடைய பல வருட கனவு என பலமுறை அவர் கூறியுள்ளார். பலரையும் அழைத்து கும்பாபிஷேக விழாவை பிரம்மாண்டமாக நடத்த வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், தற்போதுள்ள கொரோனா சூழலால் அவ்வாறு நடத்த முடியவில்லை என அவர் கூறினார்.



விஜயபாரதம்

# ராணுவ தளவாட உற்பத்தி காரிடார்

உத்தர பிரதேசத்தில் அமையவுள்ள ராணுவ தளவாட உற்பத்தி முனையத்திற்கான வேலைகள் வேகமெடுத்து உள்ளன. இதற்காக முதற்கட்டமாக, அலிகரில் 55.4 ஹெக்டேர் நிலம் 19 ராணுவ தளவாட உற்பத்தி நிறுவனங்களுக்கு குத்தகைக்கு தரப்பட்டுள்ளன. அவை, அங்கு சுமார், 1,245 கோடி ரூபாய் முதலீடு செய்யவுள்ளன. ஆலன் & எல்வோன் பிரைவேட் லிமிடெட் என்ற டிரோன் தயாரிப்பு நிறுவனத்துக்கு 30 ஆண்டுகளுக்கான குத்தகை பத்திரம் முதலில் வழங்கப்பட்டது. இதனை பிரதமர் மோடி திறந்துவைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. முதல் ராணுவ தளவாட உற்பத்தி காரிடாரை தமிழகத்தில்தான் மத்திய அரசு அமைத்தது. இது செயல்பாட்டிற்கு வரும்பட்சத்தில், சென்னை, ஓசூர், கோயம்புத்தூர், சேலம், திருச்சி போன்ற நகரங்கள் பயனடையும், ஏராளமானோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும், பொருளாதாரம் பெருகும். ஆனால், இரண்டாவதாக அறிவிக்கப்பட்ட உத்தர பிரதேசம் இதில் வேகமாக செயல்பட்டு முதலீட்டை ஈர்த்து வருகிறது. தமிழக அரசும் இதில் முனைப்பு காட்ட வேண்டும் என்பதே தமிழக மக்களின் கோரிக்கை.



விஜயபாரதம்



விஜயபாரதம்

# பெருமை சேர்க்கும் நெட்ராக்ஸ்

இந்திய ஆட்டோமொபைல் உற்பத்தியாளர்கள், இதுவரை தாங்கள் தயாரிக்கும் பைக் , கார், லாரி, டிராக்டர் உள்ளிட்ட வாகனங்களை சோதனை செய்வதற்காக, வெளிநாடுகளுக்குதான் எடுத்து சென்றனர். ஆனால், தற்போது இந்த சோதனைகளை நம் பாரதத்தில் , மத்தியபிரதேச மாநிலம் இந்தூரிலேயே செய்யமுடியும். ஆம், ஆசியாவிலேயே மிக நீளமான, உலக அளவில் 5ம் நிலையில் உள்ள ஹை ஸ்பீட் ட்ராக் 2,900 ஏக்கர் பரப்பளவில் 'நேட்ராக்ஸ் சென்டர்' மத்திய அரசால் நிறுவப்பட்டுள்ளது. வாகனங்களை மணிக்கு 375 கிலோமீட்டர் வேகத்தில் இந்த வளைவுகளில் சென்று ஸ்டியரிங் கன்ட்ரோலை சோதிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், புகை பரிசோதனை, தடம் மாறும்போது நிலைத்தன்மை உள்ளிட்ட பல சோதனைகளையும் மேற்கொள்ள முடியும். வோல்க்ஸ் வேகன், எப்.சி.ஏ, ரெனால்ட், லம்போர்கினி உள்ளிட்ட பல சர்வேதேச கார் உற்பத்தியாளர்கள் இந்த ட்ராக்கை பயன்படுத்தி கொள்ள இப்போதே விருப்பம் தெரிவித்துள்ளனர். ஒரு பக்கம் கொரோனா தொற்றுக்கு எதிராக நாடு போராடிக்கொண்டு இருந்தாலும் ,வருங்காலத்திற்கு தேவையான உள்கட்டமைப்பு வேலைகளும் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதன் மூலம் நாட்டுக்கு பல கோடி ரூபாய் வருவாய் கிடைக்கும்.


# அம்மன் கோயில் சிரசு திருட்டு

வேலூர் மாவட்டம் பேர்ணாம்பட்டு அருகே, எம்.வி.குப்பத்தில் கெங்கையம்மன் கோயில் உள்ளது. பிரசித்தி பெற்ற இக்கோயிலில் வரும் 16ஆம் தேதி கெங்கையம்மன் சிரசு திருவிழா நடத்த கிராம மக்கள் ஏற்பாடு செய்து வந்தனர். இந்த சூழலில், தற்போது கெங்கையம்மன் சிரசை காணவில்லை என்று அப்பகுதியை சேர்ந்த மக்கள் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். முன்னதாக, இக்கோயிலை அப்பகுதியை சேர்ந்த இரண்டு பிரிவினர் சொந்தம் கொண்டாடி வந்தனர். கோயில் திருவிழாவை நடத்த இரு தரப்பினரும் தனித்தனியே காவல்துறையினரிடம் அனுமதி கேட்டிருந்தனர். விழாவின்போது அசம்பாவிதம் ஏற்படாமல் இருக்க, காவல்துறையினர் அனுமதி வழங்கவில்லை. இதனைத் தொடர்ந்து கோயிலில் இருந்த கெங்கையம்மன் சிரசை கடந்த 27ம் தேதி அருகிலுள்ள ஆதிபுரீஸ்வரர் கோயிலுக்குள் மக்கள் எடுத்துச் சென்று வைத்துள்ள நிலையில்தான் சிரசு காணாமல் போனது. சி.சி.டிவி கேமரா பதிவை வைத்து காவல்துறையினர் விசாரித்து வருகின்றனர்.

விஜயபாரதம்



# திருப்பதி லட்டு விநியோகத்தில் தனியார்



விஜயபாரதம்

திருமலையில் உள்ள லட்டு பிரசாத மையங்களில், வங்கி ஊழியர்கள், ஸ்ரீவாரி சேவா உறுப்பினர்கள் இணைந்து பக்தர்களுக்கு லட்டு பிரசாதம் விநியோகம் செய்து வருகின்றனர். இந்நிலையில் இப்பணியையும் வேறு சில பணிகளையும் தனியார் வசம் ஒப்படைக்க தேவஸ்தானம் தீர்மானித்துள்ளது. இதில் டெண்டர் மூலம் பெங்களூரு கே.வி.எம் இன்ஃபோ எனும் தனியார் நிறுவனத்தின் 43 ஊழியர்களை, லட்டு விநியோக மையங்கள், வைகுண்டம் க்யூ காம்ப்ளக்ஸ் ஸ்கேனிங் பகுதி, சர்வ தரிசன டோக்கன் விநியோக மையங்கள், தங்கும் அறை ஒதுக்கும் மையங்கள் உள்ளிட்ட 164 இடங்களில் பணியமர்த்தப்பட உள்ளனர். முதல் கட்டமாக லட்டு பிரசாத மையங்களில் பக்தர்களுக்கு பிரசாதம் விநியோகம் செய்யும் பணியை தனியார் ஊழியர்கள் தொடங்கினர். இதனை திருப்பதி தேவஸ்தானமே முழுமையாக ஏற்று நடத்த வேண்டும், ஹிந்துக்கள் மட்டுமே இப்பணிகளில் ஈடுபட வேண்டும், ஆகம விதிகள் முழுமையாக பின்பற்றப்பட்டு கோயிலின் புனிதம் காக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பக்தர்களிடம் எழுந்துள்ளது.

# போலி தடுப்பூசி முகாம்



விஜயபாரதம்

மும்பையில் அடுத்தடுத்து போலி தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டு பணமோசடி வேலைகள் நடைபெற்று வருகின்றன. சில நாட்களுக்கு முன், குடியிருப்பு பகுதியில் மருந்து குப்பியில், மருந்துக்கு பதிலாக தண்ணீரைநிரப்பிதடுப்பூசிபோட்டதாக8பேர்கைதுசெய்யப்பட்டனர். தற்போது, மும்பை சமதா நகரில் தனியாரால் நடத்தப்பட்ட தடுப்பூசி முகாமில் 4 நிறுவனங்களைச் சேர்ந்த 618 தொழிலாளர்கள் பங்கேற்று தடுப்பூசி போட்டுக் கொண்டனர். அவர்களில் யாருக்கும் தடுப்பூசி போட்டதற்கான சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை. இதனால், சந்தேகமடைந்த அவர்கள் காவல்துறையில் புகார் அளித்தனர். காவல்துறை விசாரணையில், மணீஷ் திரிபாதி என்னும் மருத்துவர், கோகிலா பென் மருத்துவமனையில் முன்னாள் ஊழியர் ராஜேஷ் பாண்டே உள்பட 11 பேர் கைது செய்யப்பட்டனர்.

# திமிருக்கு தடுப்பு மருந்து கிடையாது



விஜயபாரதம்

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல், தனது டுவிட்டர் பக்கத்தில், 'ஜூலை மாதத்துக்கான தடுப்புமருந்து இன்னும் இந்தியா வந்து சேரவில்லை' என்று பதிவு ஒன்றை இட்டிருந்தார். இதற்கு பதிலளித்த ஹர்ஷவர்தன், 'ஜூலை மாதத்திற்கான தடுப்பூசி தகவல்கள் குறித்து நான் ஏற்கனவே தரவுகளை வெளியிட்டு இருந்தேன். ராகுலுக்கு என்னதான் பிரச்னை? அவர் அவற்றை பார்க்கவில்லையா? திமிருக்கும் அறியாமைக்கும் தடுப்பு மருந்து கிடையாது' என்று தனது டுவிட்டரில் பதில் அளித்தார். மத்திய அமைச்சர் பியூஷ் கோயலும் தனது டுவிட்டர் பக்கத்தில் 'ஜூலை மாதம் 12 கோடி தடுப்பூசிகள் கையிருப்பில் இருக்கும். தனியார் மருத்துவமனைகளுக்கு தனியாக விநியோகம் செய்யப்படும். தடுப்பூசி குறித்து 15 நாட்களுக்கு முன்னரே மாநில அரசுகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு உள்ளது. கோவிட்டிற்கு எதிரான போராட்டத்தில், வெற்று அரசியல் சரியானது அல்ல என்பதை ராகுல் புரிந்து கொள்ள வேண்டும்' என்று பதிவிட்டார்.

# கம்யூனிஸ்டு குடும்பம் மதமாற்றம்



விஜயபாரதம்

கேரளாவில் மலப்புரம் மாவட்டத்தில் உள்ள நிரோல்பாலத்தில் வசிப்பவர் கில்பர்ட் பி டி. இவர் ஆளும் கம்யூனிச கட்சியின் அப்பகுதி கிளைக் குழு உறுப்பினராக உள்ளார். இவர் காவல்துறையில் அளித்த புகாரில், 'இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கைச் சேர்ந்த உள்ளூர் பஞ்சாயத்து உறுப்பினர் நசீமா யூனுஸ் மற்றும் அவரது கணவர் யூனுஸ் ஆகியோர் தன் மனைவியையும் மகனையும் கோழிக்கோட்டில் உள்ள தெர்பியத்துல் இஸ்லாம் சபாவுக்கு அழைத்துச் சென்று முஸ்லிமாக மதமாற்றம் செய்துள்ளனர். மதம் மாறினால் 25 லட்சம் ரூபாயும் ஒரு வீடும் அளிப்பதாக ஆசைகாட்டியுள்ளனர். இதனால் அவர்கள் வீட்டை விட்டு சென்றுவிட்டனர். அவர்களை கண்டுபிடித்து தரவேண்டும்' என தெரிவித்துள்ளார். காவலர்கள் சரியாக இதனை விசாரிக்காத்தால் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்தார். இதனை விசாரித்த நீதிமன்றம், ஒரு வாரத்திற்குள் கண்டுபிடித்து ஆஜர் படுத்த உத்தரவிட்டுள்ளது. இதனால் கோபமடைந்த ஆளும் கம்யூனிஸ்ட் கட்சி, அவரை கட்சியை விட்டு நீக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# முடிவுக்கு வந்தது தர்பார் மாற்றம்



விஜயபாரதம்

பாரதத்தை ஆண்ட வெள்ளையர்கள் ஜம்மு காஷ்மீரின் தட்பவெப்ப சூழலுக்கு ஏற்ப, 6 மாத குளிர்கால தலைநகரமாக ஜம்முவையும், 6 மாத கோடைக்கால தலைநகராக ஸ்ரீநகரையும் அறிவித்து செயல்பட்டு வந்தனர். அதிக குளிரில் இருந்து தப்பிப்பிதற்காக இந்த நடைமுறை பின்பற்றப்பட்டது. இதற்காக, ஆறு மாதங்களுக்கு ஒருமுறை அரசு ஆவணங்களும், ஊழியர்களும், அதிகாரிகளும் ஜம்முவுக்கும், ஸ்ரீநகருக்கும் இடையே வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர். இதனால், இது 'தர்பார் மாற்றம்' என்று அழைக்கப்பட்டது. கடந்த 2019ல் ஜம்மு காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை மத்திய அரசு ரத்து செய்து, இம்மாநிலத்தை ஜம்மு காஷ்மீர், லடாக் என 2 யூனியன் பிரதேசங்களாக பிரித்தது. இவற்றுக்கு 2 ஆளுநர்கள் நியமிக்கப்பட்டு உள்ளனர். ஜம்மு காஷ்மீரின் ஆளுநர் மனோஜ் சின்ஹா, 'இப்போது இருப்பது மின்னணு யுகம். அரசு பணிகள் அனைத்தும் மின்னணு மயமாக்கப்பட்டு விட்டது. எனவே, இனிமேல் இரட்டை தலைநகர நடைமுறை தேவையில்லை. எனவே, இரட்டை தலைநகர நடைமுறை முடிவுக்கு கொண்டு வரப்படுவதாக அறிவித்தார்.' இதனால் கடந்த 149 ஆண்டுகளாக பின்பற்றப்பட்டு வந்த தர்பார் மாற்றம் முடிவுக்கு வந்துள்ளது.

# போதைப்பொருட்கள் வைத்திருந்தவர்கள் கைது



விஜயபாரதம்

கேரளாவில் , புதியவகை போதை மருந்து வைத்திருந்த முஹமது, அன்சாரி, ராம்ஷீத் மற்றும் பாஹித் ஆகியோரை கேரள காவல்துறையினர் கைது செய்தனர். இவர்களிடம் இருந்து .5 கிராம் எம்.டி.எம்.ஏ வகை போதை மருந்து கைப்பற்றப்பட்டது. எம்.டி.எம்.ஏ என்பது எக்ஸ்டசி, ஈ, மோலி என பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. இது '3,4 – மெத்திலினெடோக்ஸிமெதாம்பேட்டமைன்' என்ற புதிய தலைமுறை போதை மருந்து. இளைஞர்கள் பெரும்பாலும் இரவு கேளிக்கை விருந்துகளின் போது போதைப்பொருள் விற்பவர்களை சந்திக்கிறார்கள். போதைப்பொருள் வர்த்தகம் எளிதில் பணம் சம்பாதிக்க முடியும் என்பதால், பல இளைஞர்கள் அதில் ஈர்க்கப்படுகிறார்கள். இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புகள் போதைப்பொருள் வர்த்தகத்தின் மூலம் பெருமளவு நிதி திரட்டுகின்றன. அவை தேச விரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது.

# விசித்திர நிபந்தனை விதிக்கும் ஏ.ஐ.எம்.ஐ.எம்

உத்தரப்பிரதேச தேர்தலில் எங்கள் வேட்பாளர்களை 100 இடங்களில் நிறுத்தபோகிறோம். என்று ஏ.ஐ.எம்.ஐ.எம் கட்சித் தலைவர் அசாதுதீன் ஒவைசி தெரிவித்திருந்தார். ஏ.ஐ.எம்.ஐ.எம், பகுஜன் சமாஜ் கட்சியுடன் கூட்டணி வைக்கும் என செய்திகள் வெளியாகின. அதனை, மாயாவதி மறுத்தார். இந்நிலையில், சமாஜ்வாதி கட்சி ஒருவேளை, உ.பி. தேர்தலில் வெற்றி பெற்றால், அதன் தலைவர் அகிலேஷ் யாதவ் ஒரு முஸ்லிமை மட்டுமே துணை முதல்வராக நியமிக்க வேண்டும். அனைத்து மாநிலங்களும் துணை முதல்வராக ஒரு முஸ்லிமை நியமிக்க வேண்டும் என்ற ஒரு விசித்திர நிபந்தனையை விதித்துள்ளார் ஏ.ஐ.எம்.ஐ.எம் கட்சியின் செய்தித் தொடர்பாளர் சையத் அசிம் வக்கார். உங்களுடன் கூட்டணி வைத்துள்ள ஒரே கட்சியான 'பகிதரி சங்கல்ப் மோர்ச்சா' இக்கோரிக்கையை ஏற்குமா என்று கேட்கப்பட்டபோது, அக்கட்சித் தலைவர் ஓம் பிரகாஷ் ராஜ்பர் தனது முன்மொழிவை நிச்சயமாக ஏற்க மாட்டார் என்றும் வகார் கூறினார்.

விஜயபாரதம்



# போலி தொலைபேசி இணைப்பகம்



விஜயபாரதம்


கேரளாவின் காலிகட் மாவட்டத்தில், வெளிநாட்டு அழைப்புகளை உள்நாட்டு அழைப்பாக மாற்றி வழங்கும் போலி டெலிபோன் எக்ஸ்சேஞ் நடத்திவருவது சம்பந்தமாக வந்த தகவலையடுத்து, புலனாய்வு நிறுவனமான ஐ.பி அம்மாவட்டத்தில் 4 இடங்களில் சோதனை நடத்தியது. அப்போது, 960 சிம் கார்டுகளைக் கையாளக்கூடிய 30 சிம் பாக்ஸ் சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஜூரிஸ் என்பவர் கைது செய்யப்பட்டார்.

இதில் பயங்கரவாதிகளுக்கு தொடர்பு உள்ளதா என்ற கோணத்திலும் விசாரணை நடைபெறுகிறது. முன்னதாக 2016ல், கேரளாவில் கடவந்திர என்ற இடத்தில் ஒரு போலி டெலிபோன் எக்ஸ்சேஞ் கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு மாதத்திற்கு முன்பு ஆட்டோஸ் இன்ஃபோடெக் என்ற நிறுவனம் இதே போன்ற முறைகேட்டில் ஈடுபட்டது கண்டறியப்பட்டது. சில வாரங்களுக்கு முன், கேரளாவைச் சேர்ந்த, இப்ராஹிம் புல்லாட்டில் என்பவர் பெங்களூருவில் போலி தொலைபேசி இணைப்பகம் நடத்தியதற்காக கைது செய்யப்பட்டார் என்பது கவனிக்கத்தக்கது.

# டிரம்பின் புதிய சமூக ஊடகம்

முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் செய்தித் தொடர்பாளர் ஜேசன் மில்லர், ‘கெட்டர்’ என்ற புதிய சமூக ஊடகத் தளத்தை அறிமுகம் செய்துள்ளார். இதன் செயல்படு டுவிட்டரைப் போலவே இருந்தாலும், கெட்டரில் இடுகை 777 எழுத்துக்கள் அளவுக்கு நீளமாக இருக்கலாம் என்ற சிறப்பம்சம் உள்ளது. ஜூலை 4 அன்று அதிகாரபூர்வமாகத் துவங்கப்படும் இந்த சமூக ஊடகம் ஆண்டிராய்டு, ஆப்பிள், கூகுள் என பல்வேறு பயன்பாட்டுத் தளங்களில் கிடைக்கும். சமூக ஊடக நிறுவனங்களான பேஸ்புக், ட்விட்டர், இன்ஸ்டாகிராம் உள்ளிட்டவை, டிரம்பை தடை செய்ததைத் தொடர்ந்து அவர், தனியாக சமூக ஊடக நிறுவனம் துவங்கப்போவதாக அறிவித்திருந்தார். இந்த நிறுவனங்கள் எதேச்சதிகாரமாகவும் சார்பு நிலையுடனும் செயல்படுவதாக உலகெங்கிலும் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

விஜயபாரதம்



# வலையில் சிக்கிய மீம்கள் . . .






# சீனாவை விட்டுக்கொடுக்காத இம்ரான் கான்



விஜயபாரதம்

சீன கம்யூனிச அரசின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒரு பத்திரிகைக்கு பேட்டியளித்தார் பாகிஸ்தான் பிரதமர்இம்ரான்கான். அப்போது அந்த பத்திரிகையாளர் சீனாவில் நடைபெறும் உய்குர் முஸ்லிம்கள் மீதான சீன கம்யூனிச அரசின் வன்முறை, இன அழிப்பு குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. அதனால் தர்மசங்கடத்திற்கு ஆளான இம்ரான் கான், "இது பாசாங்குத்தனம். உலகின் பிற பகுதிகளில் மிகவும் மோசமான மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றன. ஆனால், மேற்கத்திய ஊடகங்கள் அதைப் பற்றி கருத்து தெரிவிக்கவில்லை" என கருத்து தெரிவித்து தங்கள் நண்பனான சீனாவை பாதுகாத்தார். மேலும், 'அரசியல் ரீதியாகவோ அல்லது சர்வதேச ரீதியாகவோ எங்கள் நாடு சிக்கலை எதிர்கொள்ளும் போதெல்லாம் எங்களுக்கு ஆதரவாக நின்ற ஒரே நாடு சீனா. எங்கள் இருதரப்பு உறவு மிகவும் வலுவானது. உலக ஆட்சி முறைகளில், கம்யூனிச ஆட்சிமுறை சிறந்தது' எனவும் சீனாவுக்கு தன் விஸ்வாசத்தை எடுத்துக்காட்டினார் இம்ரான் கான்.

---

# துப்பாக்கி தூக்கும் ஆப்கன் மக்கள்



விஜயபாரதம்

அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறி வருகிறது. அமெரிக்க படைகளை தொடர்ந்து ஜெர்மன் படைகளும் தற்போதுதனது படைகளைதிரும்பபெற்றுவருகிறது.இந்நிலையில், சமீபத்தில் ஆப்கன் ராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் 166 தாலிபன் பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர். அங்குள்ள மக்களும் தாலிபான் பயங்கரவாதிகளிடம் இருந்து தற்போது தங்களை காத்துக்கொள்ள ஆயுதம் ஏந்த தொடங்கியுள்ளனர். தாலிபன்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தியுள்ள நூற்றுக்கணக்கான சாதாரண பொதுமக்களுள் முகமது சலாங்கி என்பவரும் ஒருவர். பார்வின் மாகாணத்தை சேர்ந்த முகமது சலாங்கி தாலிபன்களுக்கு எதிராக தனது எச்சரிக்கையையும் பதிவு செய்துள்ளார். தாலிபன்கள் எங்களுக்கு எதிராக போர் தொடுக்கும் பட்சத்தில் எங்களது ஏழு வயது மகன் கூட ஆயுதம் ஏந்தி போரிடுவான் என அவர் கூறியுள்ளார். சர்வதேச படைகள் எங்களை கைவிட்ட பிறகு எங்கள் நாட்டை பாதுகாக்க எங்களுக்கு வேறு வழியில்லை என ஒரு மாணவர் கூறியுள்ளார்.

# தீர்ப்பு



விஜயபாரதம்

அவசரமாகக் கிளம்பிக் கொண்டு இருந்த நீதிபதி கணேசனை, மகனுடைய அலறல் டென்ஷன்படுத்தியது. தன் அக்காவின் கையிலிருந்த பொம்மைதான் வேண்டும் எனறு அடம் பிடித்து அழுது கொண்டு இருந்தான் அவன்.

"தம்பிக்கு அந்தப் பொம்மையைக் கொடுத்துத் தொலைச்சா தான் என்ன?" என்று தம் பெண்ணின் முதுகில் ஓங்கி ஓர் அறை வைத்தார் அவர்.

"அந்தப் பொம்மை ஒடைஞ்சிருக்குப்பா! ஆணி, தம்பி கையைக் கிழிச்சுடும்னு தான் கொடுக்கலே. அதைப் புரிஞ்சுக்காம என்னை அடிச்சிட்டீங்க. பரவாயில்ல... கோர்ட்டிலேயும் இது மாதிரி, என்ன ஏதுன்னு விசாரிக்காம, யாராவது நல்லவருக்குத் தண்டனை கொடுத்திடாதீங்க!" என்று விசும்பினாள் அவள்.

தம் பெண் முன் குற்றவாளியாகத் தலைகுனிந்து நின்றார் நீதிபதி கணேசன்.

---

# வெற்றியின் ரகசியம்



விஜயபாரதம்

அமெரிக்காவின் மிகப் பெரிய பணக்காரர் ராக்பெல்லர். அவர் தனது வயதான காலத்திலும் கூட ஓய்வின்றி கடுமையாக உழைத்து வந்தார். வியாபார நிமித்தம் பல நாடுகளுக்கும் பறந்து கொண்டே இருந்தார்..

ஒரு நாள் விமானப் பயணத்தின்போது அருகில் அமர்ந்திருந்த ஒரு வாலிபன் கேட்டான், ”அய்யா, நீங்களோ உலகிலேயே பெரிய பணக்காரர். உங்களுக்கும் வயதாகிவிட்டது. இன்னும் எதற்காக நீங்கள் உழைக்க வேண்டும்?”

அப்போது ராக்பெல்லர், ”இப்போது நாம் செல்லும் விமானம் அதிக பட்ச உயரத்தில் பறந்து கொண்டிருக்கிறது அல்லவா? இதற்கு மேல் உயரப் போக முடியாது. இதில் திருப்தி அடைந்து விமானம் ஓடுவதை நிறுத்தினால் என்ன ஆகும்?” என்று கேட்டார்.

விபத்து உண்டாகும் என வாலிபன் பதில் சொன்னான்.

உடனே ராக்பெல்லர், ”நம் வாழ்க்கையும் அத்தகையதே. மேலே வந்து விட்டோம் என்று ஓய்வு எடுக்கப்போய் விட்டால் தொழில் நசிந்துவிடும். உழைப்பது என்பது வருமானத்துக்கு மட்டுமல்ல. அது என் மன திருப்திக்கு, உடல் ஆரோக்யத்திற்கு.” என்றார்.

வாலிபன் இப்போது அவருடைய வெற்றியின் ரகசியத்தை அறிந்து கொண்டான்.